பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி - சென்னை - 4

29 09 2025 6 45

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தானை வீழ்த்தி 9வது முறையாக கோப்பையை வென்ற இந்திய அணிக்கு குடியரசுத்தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.
- இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக மாற்ற, அடுத்த 25 ஆண்டுகளில் சுமார் ஏழரை மடங்கு வளர்ச்சியடைவது அவசியம் என்று, நித்தி ஆயோக் இயக்குனர் திரு. Shashank Shah கூறியுள்ளார்.
- கரூரில், த.வெ.க. பொதுக்கூட்டத்தில் நேரிட்ட உயிரிழப்பு சம்பவம் தொடர்பாக, தமிழக அரசால் அமைக்கப்பட்டுள்ள விசாரணை ஆணையம், தனது விசாரணையைத் தொடங்கியுள்ளது.
- கரூர் நெரிசலில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 41ஆக அதிகரித்துள்ளது.
- ஆசிய நீச்சல் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீஹரி நடராஜ் 2 வெள்ளிப் பதக்கங்களை வென்றுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

ஆசிய கோப்பை கிரிக்கெட்டில் பாகிஸ்தானை வீழ்த்தி 9வது முறையாக கோப்பையை வென்ற இந்திய அணிக்கு குடியரசுத்தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

துபாயில் நேற்று நடைபெற்ற இறுதிப்போட்டியில் டாசில் வென்ற இந்தியா பந்துவீச தீர்மானித்ததையடுத்து, முதலில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி, 19 புள்ளி ஒரு ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 146 ரன் எடுத்தது.

பின்னர் களமிறங்கிய இந்திய அணி 19 புள்ளி 4 ஓவரில் 5 விக்கெட்டுகளை மட்டும் இழந்து 150 ரன் எடுத்தது.

இதன் மூலம் இந்திய அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வென்றது.

அதிகபட்சமாக திலக் வர்மா 69 ரன் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இந்திய அணியின் இந்த வெற்றிக்கு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், வருங்காலத்திலும் இந்திய அணி தொடர் வெற்றிகளைப் பெற வாழ்த்துவதாக கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், விளையாட்டுக் களத்திலும் ஆபரேஷன் சிந்தூர் வெற்றி பெற்றிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த வெற்றியைப் பெற்ற இந்திய அணி வீரர்களுக்கு தமது பாராட்டுகள் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், இந்திய வீரர்கள் தங்களது அபார விளையாட்டுத் திறனால் வரலாற்றுச் சிறப்பு மிக்க வெற்றியைப் பெற்றிருப்பதாக கூறியுள்ளார்.

களம் எதுவாக இருந்தாலும் இந்திய அணி வெற்றி பெறுவது நிச்சயம் என்பதை இது உணர்த்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் ஆசிய கோப்பையை வென்ற இந்திய அணிக்கு 21 கோடி ரூபாய் பரிசுத் தொகை வழங்கப்படும் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்துள்ளது.

இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக மாற்றுவதற்கு, அடுத்த 25 ஆண்டுகளில் சுமார் ஏழரை மடங்கு அளவிற்கு வளர்ச்சியடைவது அவசியம் என்று, நித்தி ஆயோக் இயக்குனர் திரு. Shashank Shah தெரிவித்துள்ளார்.

வேலூரை அடுத்த காட்பாடியில், தனியார் பல்கலைகழக நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்த இலக்க அடைவதில் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் முக்கியப் பங்கு வகிக்கும் என்றார்.

நாட்டில் உள்ள பல்கலைகழகங்களில் சுமார் நான்கரை கோடி மாணவர்கள் உயர்கல்வி பயிலும் நிலையில், பல்கலைகழகங்களை, புதுமை கண்டுபிடிப்புகளுக்கான ஆராய்ச்சி மைய்ஙகளாக மாற்ற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

அடுத்த 25 ஆண்டுகளில், ஆராய்ச்சிக்கான முதலீடு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பூஜ்யம் புள்ளி ஏழு சதவீதத்தில் இருந்து மூன்று புள்ளி ஐந்து சதவீதமாக அதிகரிக்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்த காலகட்டத்தில், நாட்டிலுள்ள 100 கோடி மக்கள், நடுத்தரப் பிரிவுக்கு மாறுவார்கள் என்றும் திரு. Shashank Shah குறிப்பிட்டார்.

<<<<>>>>

கரூரில், த.வெ.க. பொதுக்கூட்டத்தில் நேரிட்ட உயிரிழப்பு தொடர்பாக, தமிழக அரசால் அமைக்கப்பட்டுள்ள விசாரணை ஆணையம், தனது விசாரணையைத் தொடங்கியுள்ளது.

ஆணையத்தின் தலைவரான ஓய்வுபெற்ற நீதிபதி திருமதி.அருணா ஜெகதீசன், சம்பவம் நடைபெற்ற இடத்தைப் பார்வையிட்டதுடன், கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெறுவோரையும் சந்தித்து, சம்பவம் குறித்து கேட்டறிந்தார்.

<<<<>>>>

கரூர் த.வெ.க. பொதுக்கூட்டத்தில் நேரிட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 41ஆக அதிகரித்துள்ளது.

இம்சம்பவத்தில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த கரூர் வேலுச்சாமிபுரத்தைச் சேர்ந்த கருணா என்பவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இதனிடையே, கரூர் நெரிசலில் காயமடைந்தவர்களுக்கு 8 மாவட்டங்களைச் சேர்ந்த 345 மருத்துவர்கள் அடங்கிய குழுவினர் சிகிச்சை அளித்து வருவதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மருத்துவமனையில் சிகிச்சை பெறுவோரை சந்தித்து ஆறுதல் கூறிய பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சேலம், நாமக்கல், மதுரை, கோவை, திருச்சி உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த மருத்துவர்கள் இந்தப் பணியில் ஈடுபட்டிருப்பதாக கூறினார்.

கரூர் மாவட்ட ஆட்சியருடன், திருச்சி, திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர்களும் இணைந்து ஒருங்கிணைப்பு பணிகளை மேற்கொண்டு வருவதாகம் அவர் குறிப்பிட்டார்.

வருங்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் நிகழாமல் தடுக்க மாநில அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்றும் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

**<<<<>>>>**

கரூர் கூட்ட நெரிசலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு காங்கிரஸ் கட்சி சார்பில் மொத்தம் ஒரு கோடி ரூபாய் நிதி உதவி வழங்கப்படும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. செல்வப்பெருந்தகை அறிவித்துள்ளார்.

இச்சம்பவத்தில் காயமடைந்தவர்களை சந்தித்து ஆறுதல் கூறிய பின் கரூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதுபோன்ற சம்பவங்கள் நிகழாமல் தடுக்க அனைத்து தரப்பினரும் ஒருங்கிணைந்து நடவடிக்கை எடுப்பது அவசியம் என்றும் குறிப்பிட்டார்.

<<<<>>>>

பொதுமக்கள் அதிகம் கூடும் நிகழ்ச்சிகளின்போது, தலைவர்களுக்கு வழங்கப்படுவது போல மக்களின் பாதுகாப்பையும் உறுதி செய்வது அவசியம் என்று இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் திரு. வீரபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், த.வெ.க. பொதுக்கூட்டத்தில் பங்கேற்றவர்களின் கூட்டம் படிப்படியாக அதிகரித்தபோது, ஆரம்பத்தில் இருந்து காத்திருந்தவர்கள் வெளியேற முயன்ற நிலையில் அவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டதும்,

கீழே விழுந்தவர்களை உடனடியாக சிகிச்சைக்கு அனுப்ப உரிய ஏற்பாடுகள் இல்லாததும் உயிரிழப்புக்கு காரணமாகிவிட்டதாக கூறியுள்ளார்.

**<<<<>>>>**

இனி, மக்களின் மனதை வென்ற மத்திய அரசின் திட்டங்கள்...

சேவை, நல்லாட்சி என்பதை தாரக மந்திரமாக கொண்டு ஓய்வின்றி பணியாற்றி வரும் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, சிறந்த நிர்வாகத்தின் மூலம் மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது.

இதுகுறித்த சிறப்பு தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது ரயில்வேயை நவீன மயமாக்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்த நடவடிக்கைகள்.

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பெற்ற பின்னர் ரயில்வேயை நவீனமயமாக்குவதற்கான பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்காள்ளப்பட்டு வருகின்றன.

இதன் காரணமாக உலக தரத்திலான பயண அனுபவத்தை ரயில் பயணிகள் பெற்று வருகின்றனர்.

காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை ரயில்வே கட்டமைப்பு சிறப்பாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

அண்மையில் உதம்பூர் - ஸ்ரீநகர் - பாராமுல்லா ரயில் வழித்தடத்தை திறந்துவைத்து திரு நரேந்திர மோடி பேசினார்.

*பயணிகள் பாதுகாப்பான ரயில் பயணத்தை மேற்கொள்வதை உறுதி செய்யும் வகையில், மத்திய அரசு அம்ரித் பாரத், நமோ பாரத் ராப்பிட் ரயில் போன்ற ரயில் சேவைகளை மத்திய அரசு அறிமுகப்படுத்தியது.*

*அடுத்த இரண்டு முதல் மூன்றாண்டுகளில் 200 புதிய வந்தேபாரத் ரயில்கள், 100 அம்ரித் பாரத் ரயில்கள், 50 நமோ பாரத் ராப்பிட் ரயில் போன்றவற்றின் சேவைகளை ரயில்வே அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது.*

*இதுதவிர, 14 ஆயிரத்து 500 குளிர்சாதன வசதி இல்லாத பெட்டிகளும் ரயில்வேயில் சேர்க்கப்பட உள்ளன.*

*வந்தே பாரத் ரயில் சேவை தங்களுக்கு புதிய பயண அனுபவத்தை அளிப்பதாக பயணி ஒருவர் தெரிவித்தார்.*

*அம்ரித் பாரத் ரயில் நிலைய திட்டத்தின்கீழ், ஆயிரத்து 300-க்கும் மேற்பட்ட ரயில் நிலையங்கள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.*

*சர்வதேச தரத்திற்கு இணையான வசதிகள் இந்த ரயில் நிலையங்களில் ஏற்படுத்தப்படுகின்றன.*

*ரயில் விபத்துகளை தடுப்பதற்கான அதிநவீன கருவிகளும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.*

*பொதுமக்களுக்கு அதிநவீன ரயில் சேவையை வழங்கும் நோக்கில், அடுத்த ஐந்தாண்டுகளுக்கான தொலைநோக்கு பார்வையுடன் கொண்ட தேசிய ரயில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.*

*மத்திய அரசு மேற்கொள்ளும் இதுபோன்ற நடவடிக்கைகள் ரயில் பயணிகளுக்கு மகிழ்ச்சி அளிக்கும் என்பதில் ஐயமில்லை.*

*இருவரிச் செய்திகள்*

ஐ.நா. அமைப்பான சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பின் உறுப்பினராக, தென்னாப்பிரிக்கா மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

**<<<<>>>>**

பங்களாதேஷில் இந்த ஆண்டு டெங்குக் காய்ச்சலுக்கு பலியானோர் எண்ணிக்கை 192-ஆக அதிகரித்துள்ளது.

**<<<<>>>>**

இலங்கை தலைநகர் கொழும்புவில் உள்ள விநாயகர் கோவில் கலையரங்கில் இந்திய கலாச்சார சங்கத்தின் சார்பில் துர்கா பூஜை கொண்டாட்டங்கள் தொடங்கியுள்ளது.

<<<<>>>>

Bualoi சூறாவளி காரணமாக வியட்நாம் நாட்டில் விமான நிலையங்கள் மூடப்பட்டு ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

ஜார்கண்ட் மாநிலம் பொகாரோ எஃகு ஆலையில் ஏற்பட்ட தீ விபத்தில் நான்கு தொழிலாளர்கள் காயம் அடைந்தனர்.

<<<<>>>>

மணிப்பூரில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட தேடுதல் வேட்டையில் தடை செய்யப்பட்ட அமைப்புகளைச் சேர்ந்த 4 தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டனர்.

<<<<>>>>

மிசோரம் மாநிலத்தில் சுமார் 9 கோடி ரூபாய் மதிப்புள்ள வெளிநாட்டு சிகரெட்டுகள் மற்றும் போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

<<<<>>>>

நாகப்பட்டினம் மாவட்டத்தில் முன் அனுமதியின்றி பொது இடங்களில் ட்ரோன்களை பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் திரு. ஆகாஷ் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

கரூரில் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களுக்கு பிஜேபி சார்பில் மயிலாடுதுறையில் மெழுகுவர்த்தி ஏற்றி மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

<<<<>>>>

திருவாரூர் மாவட்டம் வடுவூர் கோதண்டராமர் கோவிலில் நடைபெற்ற புரட்டாசி மாத கேட்டை நட்சத்திர உற்சவத்தில் ஏராளமானோர் பங்கேற்று வழிபட்டனர்.

**<<<<>>>>**

ஆசிய நீச்சல் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீஹரி நடராஜ் 2 வெள்ளிப் பதக்கங்களை வென்றுள்ளார்.

**<<<<>>>>**